அறிவிக்கப்பட்டது. ஆனால் மெரினா கடற்கரைச் சாலை சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரை உள்ள பகுதி சென்னை மாநகராட்சி மன்றத்தால் பராமரிக்கப் படுகிறது எனவும், மேற்படி சாலையில் பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே உள்ள குறைபாடுகள் மாநகராட்சி மன்றத்தால் கவனிக்கப்பட்டன என்றும் இப்போது தகவல் கிடைத்துள்ளது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

## 4. அரசினர் மசோதாக்கள்.

### (அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அவை மசோதா எண் 18/1968).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை ஃ அவை முன் அளிக்கிறேன்.

### (இ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 5. முதலமைச்சரின் உடல்நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலைபற்றிய அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேற்றுக் காலை சிறிதளவு மார்பு வலி ஏற்பட்டது. டாக்டர்கள் தக்க சிகிச்சை அளித்து, தூக்கத்திற்கான மருந்தும் அளித்தனர். பிறகு மார்பு வலி தணிந்தது, சிறிது பிராணவாயு தரப்பட்டது என்றும், இனி அது தேவைப்படாது என்றும் டாக்டர்கள் கூறுகிறார்கள். ரேடியம்

ஃ 1969 சனவரி 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.